ஆண்டு பட்டிகை வழக்கு எண்.168/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 168/2025 LW- 2 PW- 2

Name : சக்திவேல் ( கண்ணுற்ற சாட்சி)

Father's Name : தேனிமலை

Village : கோடாங்கிபட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 35/2026

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of April 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து டெய்லர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ சம்பவத்தன்று பார்த்தேன். ஆஜர் எதிரி லாரி ஓட்டி வந்தவர் ஆவார். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் பகல் வேளையில் எங்கள் வீட்டிற்கு அருகில் செந்துறையிலிருந்து –மணக்காட்டூர் செல்லும் சாலையில் அ.சா.1 ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் செந்துறையிலிருந்து வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி எதிர் திசையில் மணக்காட்டுரிலிருந்து லோடு ஏற்றும் பெரிய லாரியை ஓட்டிக்கொண்டு வேகமாக வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். இருசக்கர வாகனத்தில் வந்த அ.சா.1ற்கு முழங்காலில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. இருசக்கர வாகனம் சேதமடைந்து இருந்தது. நானும், அருகில் இருந்தவர்களும் சேர்ந்து காயம்பட்ட நபரை 108 அவசர ஊர்தியில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2) போலீசார் விசாரிக்கும் போது பெயரும், முகவரியும் மட்டும் சொன்னேனா என்றால் அதையும் சொல்லி சம்பவம் நடந்ததை பற்றி கேட்டபோது விபத்து நடந்த விதத்தையும் சொன்னேன். சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை, இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். சம்பவம் எந்த தேதியில், எங்கு வைத்து, எத்தனை மணிக்கு நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. தேதியும், நேரமும் ஞாபகம் இல்லை, எனது வீட்டிற்கு பக்கத்தில் தான் நடந்தது. எனது வீடு ரோட்டுக்கு அருகே உள்ளது. சம்பவம் நடந்த சாலை ஆனது வளைவான சாலை என்றால் சரிதான், சிறிது வளைவு உள்ளது, எனது வீட்டில் இருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் அந்த வளைவு உள்ளது.

3) இருசக்கர வாகனத்தில் வந்தவர் மது போதையில் வந்தார் என்றால் அது பற்றி தெரியாது, இடித்ததற்கு பிறகுதான் பார்த்தேன். விபத்தின் போது பார்க்கவில்லை என்றால் சரிதான். கோடாங்கிபட்டியில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி கோடாங்கிபட்டி என்று சொல்லாமல் வேறு இடத்தை குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். சம்பவத்தின் போது விபத்தில் காயமடைந்த நபர் தெளிவாக இருந்தார் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் சம்பவமானது வளைவான பகுதியில் நடந்ததாக தெரிவித்திருந்தால் அது தவறு என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் வளைவான பகுதி என்பதால் எதிர் திசையில் வரும் வாகனங்கள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல, பெரிய வாகனங்கள் வருவது தெரியும். மேலும், அங்கு சிறிய வளைவு தான் உள்ளது.

4) ஆஜர் எதிரி தான் லாரியை ஓட்டி வந்தார் என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் சொல்லிதான் தெரியும். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே என்ன உள்ளது என்ற விவரங்கள் என்னால் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தான் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டி வந்தார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார் என்றாலும், அதனால் இரு புறங்களிலும் மரங்கள் இருந்ததால் தானாக விபத்தை ஏற்படுத்தியதில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 தெரிந்தவர் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயம் ஆஜர் எதிரி எந்த வாகனமும் ஓட்டவில்லை என்றாலும் சம்பவ இடத்தின் வழியாக லாரி செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்